செ.வெ.எண்:402/2009(செமதொஅ) நாள். 19.11.2009

**தமிழகம் முழுவதும் கூட்டுறவு வங்கி மூலம் 24 லட்சத்து 56 ஆயிரத்து 976 விவசாயிகளுக்கு ரூ.5430 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது – மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் பேச்சு.**

காஞ்சிபுரம் அண்ணா அரங்கில் மாவட்ட அளவிலான 56வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கூட்டுறவு வார விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு, சிறந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு பாராட்டு கேடயங்கள், போட்டியில் வெற்றிப் பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பரிசுகள், மத்திய கூட்டுறவு வங்கி மூலம் கல்விக்கடனாக 11 நபர்களுக்கு ரூ.3.91 லட்சமும், சிறுவணிக கடனாக 4 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.5.75 லட்சமும், சின்ன காஞ்சிபுரம் கூட்டுறவு நகர வங்கி மூலம் 9 நபர்களுக்கு பல்வேறு கடன்களாக ரூ.9.86 லட்சமும் ஆக மொத்தம் ரூ.20 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரையாற்றிப் பேசியதாவது.

56வது கூட்டுறவு வார விழாவில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கூட்டுறவுத்துறை மக்களுக்கு ஆற்றிடும் பணிகளை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஆண்டுதோறும் நவம்பர் 14ம் தேதி முதல் 20ம் தேதி வரை நாடு முழுவதும் கூட்டுறவு வார விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நலிந்த பிரிவினர், இளைஞர் மற்றும் பெண்களுக்கான சமூக நீதி மற்றும் உரிமைகள் அளித்தல் என்ற தலைப்பில் இன்று இந்த கூட்டுறவு வார விழா கொண்டாடப்படுகிறது.

இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்த பழைய செங்கல்பட்டு மாவட்டத்தில் திரூரில் 1904ஆம் ஆண்டு முதன்முதலாக கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதே ஆண்டு சின்ன காஞ்சிபுரத்தில் கூட்டுறவு நகர வங்கியும் துவக்கப்பட்டது. இந்த நகர வங்கியில் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் உறுப்பினராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தந்தை பெரியார் பேசும்போது, ‘மக்கள் சமூதாயம் கவலையற்று வாழ ஒழுங்கான முறை கூட்டுறவு தத்துவ வாழ்க்கை முறையே ஆகும்’ என்றும், பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘மக்கள் ஒருமைப்பாட்டின் மறுஉருவமாக விளங்குவது கூட்டுறவு. மக்களாட்சி மலர்ச்சி அடையும் போது கூட்டுறவு உணர்வும் வளர்ச்சி அடைகிறது’ என்றும், டாக்டர் கலைஞர் அவர்கள் ‘காகங்களைப் போல் கூடி கரைந்து, கலைந்து சென்று விடாமல், வளங்கொழிக்க மேகங்களைப் போல் கூடுவோம். மேன்மையுற கூட்டுறவை நாடுவோம்’ என்றும் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி கூறியுள்ளார்கள்.

எனவே, அத்தகைய ஆற்றலை கூட்டுறவு இயக்கங்களுக்கு உள்ளது. கூட்டுறவு இயக்கம் நாட்டின் சமூக மேம்பாட்டிற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் பெரும் பங்காற்றி வருகிறது. ஆகவே, கூட்டுறவு இயக்கம் மேலும் தழைக்க அனைவரும் பாடுபட வேண்டும். 105 ஆண்டுகளை தாண்டி கூட்டுறவு சங்கம் மிக சிறப்பாக இன்றைக்கும் செயல்பட்டு வருகிறது. கடந்த கால ஆட்சியில் கூட்டுறவு துறை நலிவுற்ற நிலையில் இருந்தது. நமது மாவட்டத்தில் 123 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் நலிவடைந்து இருந்தன. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு அதனை வலுப்படுத்த ரூ.25 கோடி வழங்கப்பட்டு தற்போது இலாபத்தில் இயங்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற போது 35 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாத நிலை இருந்தது. தற்போது அந்த வங்கிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு, சம்பளம் வழங்க இயலாத சங்கங்களே இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற உடன் தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளின் ரூ.7 ஆயிரம் கோடி கடனை அறவே தள்ளுபடி செய்துள்ளார். இதனால் தமிழகம் முழுவதும் 22 லட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் ரூ.144 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டு 66 ஆயிரத்து 582 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். தமிழகத்தில் உள்ள விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்துள்ளதை போல மத்திய அரசு இந்தியா முழுவதும் ரூ.70 ஆயிரம் கோடி கடன்களை தள்ளுபடி செய்துள்ளது. இதில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2.81 லட்சம் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 1539 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.

தமிழகத்தில் விவசாயிகளின் கடன் வட்டி விகிதம் 2006ஆம் ஆண்டில் 7 சதவீதமாக இருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டு, 2008ஆம் ஆண்டு 4 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றவர்கள், வாங்கிய கடனை காலக்கொடுவுக்குள் திருப்பி செலுத்தியவர்களுக்கு வட்டி இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் 27 ஆயிரத்து 105 நியாய விலைக்கடைகள் மூலம் அரிசி விநியோகம் செய்யப்பட்டு 1 கோடியே 85 லட்சம் குடும்பங்கள் பயன்பெற்று வருகிறார்கள். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1292 நியாய விலைக்கடைகள் மூலம் அரிசி விநியோகம் செய்யப்பட்டு 5 லட்சத்து 96 ஆயிரம் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகிறார்கள். விலைவாசியை கட்டுப்படுத்துவதற்காக நியாய விலைக்கடைகள் மூலம் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை, மைதா போன்ற 10 மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டு விலைவாசியை தமிழகம் முழுவதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் உள்ள கூட்டுறவு வங்கிகள் மூலம் 2006-2007ஆம் ஆண்டு 6 லட்சத்து 31 ஆயிரத்து 283 விவசாயிகளுக்கு ரூ.1251 கோடியும், 2007-2008ஆம் ஆண்டு 6 லட்சத்து 48 ஆயிரத்து 397 விவசாயிகளுக்கு ரூ.1394 கோடியும், 2008-2009ஆம் ஆண்டு 6 லட்சத்து 91 ஆயிரத்து 192 விவசாயிகளுக்கு ரூ.1214 கோடியும் ஆகமொத்தம் 24 லட்சத்து 56 ஆயிரத்து 976 விவசாயிகளுக்கு ரூ.5430 கோடி பயிர் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு வங்கி மூலம் 2006-2007ஆம் ஆண்டு 13 ஆயிரத்து 462 விவசாயிகளுக்கு ரூ.32.37 கோடியும், 2007-2008ஆம் ஆண்டு 13 ஆயிரத்து 793 விவசாயிகளுக்கு ரூ.38.63 கோடியும், 2008-2009ஆம் ஆண்டு 15 ஆயிரத்து 259 விவசாயிகளுக்கு ரூ.43.28 கோடியும் 2009-2010ஆம் ஆண்டு 11 ஆயிரத்து 322 விவசாயிகளுக்கு ரூ.29.86 கோடியும் ஆக மொத்தம் 53 ஆயிரத்து 836 விவசாயிகளுக்கு ரூ.144.14 கோடி பயிர்கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், கூட்டுறவு துறைகள் மூலம் 2009-2010ஆம் ஆண்டு மத்திய கால கடனாக 1033 நபர்களுக்கு ரூ.3.13 கோடியும், பண்ணை சாரா கடனாக 1105 நபர்களுக்கு 9.70 கோடியும், நகைக்கடனாக 1 லட்சத்து 50 ஆயிரத்து 791 நபர்களுக்கு 366 கோடியும், மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு 2145 நபர்களுக்கு 15.28 கோடியும், சிறுவணிக கடனாக 591 நபர்களுக்கு 31 லட்சமும் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையில் பணியாற்றுகின்ற அலுவலர்கள் சிறப்பாக பணியாற்றுவதால் இத்துறை நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மக்களின் தேவைகளை அறிந்து மக்கள் நல திட்டங்களை நிறைவேற்றுகின்ற அரசாக இந்த அரசு விளங்குகிறது என தெரிவித்தார்.

இந்த கூட்டுறவு வார விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப அவர்கள் தலைமையுரையாற்றிப் பேசினார். கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் திரு.கோ.செந்தில்குமார் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். சட்டமன்ற உறுப்பினர்கள் திருக.சுந்தர், சக்தி பெ.கமலாம்பாள், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி ஆகியோர் முன்னிலையுரையாற்றினார்கள். மாநில கைத்தறி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.சி.வி.எம்.அ.பொன்மொழி, மாவட்ட கைத்தறி ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.சி.வி.எம்.அ.சேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முடிவில் மத்திய கூட்டுறவு வங்கி பொதுமேலாளர் திரு.ஆர்.ரவிச்சந்திரன் அவர்கள் நன்றி கூறினார். விழாவில் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் திரு.பி.எம்.குமார், மாநில கைத்தறி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.ஜி.கே.வஜ்ஜிரவேல், மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர், தனிஅலுவலர் திருமதி.த.காமாட்சி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை துணை இயக்குநர் திரு.மு.பழனிசாமி, மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் திரு.ந.இளங்கோவன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எம்.அசோகன், கூட்டுறவுத்துறை துணை பதிவாளர்கள், உதவி இயக்குநர்கள், பள்ளி மாணவ-மாணவிகள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் விவசாயிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். முடிவில் பள்ளி மாணவ-மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.



செய்தி வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்